REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 பெப்ரவரி 1 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN

තිනකරන්



வரு. 89 இல. 27 | Monday 01,February, 2021 | 20பக்கங்கள் | 30/-



"கிராமத்துடன் உரையாடல்" நிகழ்ச்சியில் பங்கேற்க தனமல்விலவுக்குச் சென்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ , கொட்டவெஹர மங்கட மகா வித்தியாலய வளாகத்தில் கூடியிருந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் கிராமவாசிகளுடன் கலந்துரையாடிய போது,.....

## பாரம்பரிய விவசாய நிலங்களில் தொடர்ச்சியாக பயிரிட விவசாயிகளை அனுமதிக்க வேண்டும்



**பழைய சுற்றறிக்கை வழக்குகளை வாபஸ் பெறுமாறு ஜனாதிபதி அறிவுறுத்தல்**

பாரம்பரியமாக விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் நிலங்களை விவசாயிகளுக்கு தொடர்ச்சியாக பயிரிட அனுமதிக்கும் புதிய சட்ட திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் பழைய சுற்றறிக்கைகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை மீளப் பெறுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 08

### 73ஆவது தேசிய சுதந்திர தின விழா;

## இன்று முதல் தேசியக் கொடியை பறக்க விட வேண்டுகோள்



இலங்கையின் 73 வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு அனைத்து வீடுகள், வர்த்தக நிலையங்கள் உட்பட அரச மற்றும் தனியார் நிறுவனங்களிலும் மற்றும் வாகனங்களிலும் தேசியக் கொடியை பறக்கவிடுமாறு 08

## அத்தியாவசிய சேவையானது துறைமுக அதிகார சபை

### ஜனாதிபதி பிரகடனம்; வர்த்தமானி வெளியானது



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கை துறைமுக அதிகார சபையின் அனைத்து சேவைகளையும் அத்தியாவசிய சேவையாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரகடனப்படுத்தியுள்ளார். 08

## அரசியல் பழிவாங்கல்களால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் ப

# விசேட ஆணைக்




**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் இறுதி அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்ற நீதிபதி தம்மிக்க பிரியந்த சமரக்கோன் ஜயவர்தன தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் உச்சநீதிமன்ற நீதிபதி குமுதினி விக்கிரமசிங்க, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ரத்னபிரிய குரு சிங்க ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாவர்.

## ஜனாதிபதியினால் நியமனம்; வர்த்தமானி அறிவித்தலும் நேற்றைய தினம் வெளியானது

2015 ஜனவரி மாதம் எட்டாம் திகதி முதல் 2019 நவம்பர் 16ம் திகதி வரை இடம்பெற்றுள்ள அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டு அதன் இறுதி அறிக்கை அண்மையில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அதன் இறுதி அறிக்கை அமைச்சரவைக்கு 08

## கிழக்கு முனையம் தொடர்பிலான வேலைநிறுத்தம் அவசியமற்றது

### உண்மையை விளக்க தொழிற்சங்கங்களுக்கு பிரதமர் அழைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொழும்பு துறைமுக கிழக்கு முனையம் தொடர்பில் வேலை நிறுத்த போராட்டம் மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை. தொழிற்சங்கத்தினர் என்னிடம் வந்தால் நான் அவர்களுக்கு உண்மை நிலையை தெளிவுபடுத்துவேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தை எவருக்கும் விற்பனை செய்யவோ 08

## சர்வதேச நாடுகளின் விருப்பத்திற்கேற்ப நாட்டை நிர்வகிக்க இடமளிக்க முடியாது

### நல்லாட்சி அரசில் நடந்தவற்றை மறந்து பேசும் எதிரணி



சர்வதேச நாடுகளின் விருப்பத்திற்கு எமது நாட்டை நிர்வகிக்க இடமளிக்க முடியாது என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த நல்லாட்சி காலத்தில் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொலிஸ் மற்றும் நீதிமன்றங்களுக்கு அழுத்தம் கொடுத்து எதிர்க்கட்சியினரை சிறைக்குள் தள்ளினர். இப்போது மனித உரிமை பற்றி பேசும் மனித உரிமை ஆணையாளர்கள் அதனை கண்டுகொள்ளவில்லை என்றும் 08

## அமைச்சர் பவித்ரா தேறி வருகிறார்



### கணவர் காஞ்சன ஜயரத்ன தகவல்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

ஐ.டி.எச். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்ற சுகாதார சுதேச வைத்திய அமைச்சரும் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பவித்ரா வன்னியாரச்சி 08

### 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு இராணுவப் பயிற்சி;

## இன, மத ரீதியாக சிந்திக்காது அனைவரும் இணைந்து செயற்படுவதே ஆரோக்கியமானது

### சி.வி. விக்கியின் அறிக்கைக்கு அமைச்சர் சரத் வீரசேகர பதில்



**(ஷம்ஸ் பாஹிம்)**

18 வயதிற்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு இராணுவப் பயிற்சி வழங்குவது தொடர்பான தனது கருத்தை பாராளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரன் வரவேற்றிருப்பது தனக்கு மகிழ்ச்சி அளிப்பதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தினகரனுக்கு தெரிவித்தார்.

ஒரு விடயத்திலாவது இருவருக்கும் உடன்பாடான கருத்து ஏற்பட்டிருப்பதை வரவேற்ற அவர், இராணுவ பயிற்சி வழங்கும் இந்த திட்டத்திற்கு சி.வி. விக்னேஸ்வரன் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கோரினார்.

18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு இராணுவ பயிற்சி அளிக்க உத்தேசித்துள்ளதாக அமைச்சர் சரத் வீரசேகர சில நாட்களுக்கு முன்னர் கூறியிருந்தார். இதற்கு 08



## பெப். 23ஆம் திகதி இலங்கை வருகிறார் பாகிஸ்தான் பிரதமர்

எதிர்வரும் பெப்ரவரி 23 ஆம் திகதி பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த தகவலை வெளியுறவு செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகே உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன் மூலம் கடந்த ஆண்டு முதல் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு விஜயம் செய்த முதல் அரசாங்கத் தலைவராக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இருப்பார். இந்திய வெளியுறவு அமைச்சர் 08

## நுவரெலியாவில் சிறிய நிலநடுக்கம்

### 2.0 ரிக்டர் அளவில் பதிவானது



## ஜெனீவா மனித உரிமை பேரவையை எதிர்கொள்ள அரசாங்கம் தயார்

### அனைத்து நடவடிக்கைகளும் வெற்றிகரமாக முன்னெடுப்பு

## தடுப்பூசி விடயத்தில் மலையக மக்களையும் கவனியுங்கள்

### செந்தில் தொண்டமான் கோரிக்கை

### சுய தனிமைப்படுத்தப்பட்டோரை

## கண்காணிக்க சிவில் உடையில் பொலிஸார்